# வாசவி பள்ளியின் மற்றுமொரு மைல்கல்

## பள்ளி நேரத்திலேயே NEET மற்றும் JEE க்கான பயிற்சி வகுப்புகள்

வாசவி இன்டர்நேஷனல் பள்ளியில் 11 மற்றும் 12ம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கான **NEET** மற்றும் **JEE** தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் வரும் கல்வி ஆண்டு முதல் தொடங்க இருக்கிறது.

2012 முதல் முத்தியால் பேட்டையில் இயங்கி வரும் வாசவி இன்டர்நேஷனல் பள்ளி CBSE பாடத்திட்டத்தின் கீழ் மிக நேர்த்தியுடன் இயங்கி வருகிறது. இப்பள்ளியின் தொடக்க காலத்தில் இருந்து பெற்றோர்களிடமிருந்து பள்ளி கட்டிடத் தொகையோ, சேர்க்கைத் தொகையோ எந்த விதத்திலும் நன்கொடையாகவும் பெற்றதில்லை. புதுவை மாநிலத்திலேயே CBSE திட்டத்தின் கீழ் மிகக் குறைவான கல்விக்கட்டணம் பெறும் பள்ளியாக திகழ்கிறது.

வரும் கல்வி ஆண்டில் இப்பள்ளியின் மற்றொரு பரிமாணமாக 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மிகக் குறைந்த பள்ளி கட்டணத்தில், பள்ளி நேரத்திலேயே பயிற்றுவிக்கும் வகையில் **NEET** மற்றும் **JEE** க்கான பயிற்சி வகுப்புகள் தொடங்க திட்டமிட்டு இருக்கிறது. **புதுச்சேரி ஆரிய வைசிய கல்வி அறக்கட்டளையின் நிதி ஆதரவோடு** மாணவர்கள் பயன்பெறும் வகையில் இப்பயிற்சி வாசவி இன்டர்நேஷனல் பள்ளியில் தொடங்க இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். **இதன் மூலம் இப்பயிற்சிக்கான கூடுதல் கட்டணம் எதுவும் இன்றி பள்ளி கட்டணத்திலேயே பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகிறது.** இதன் மூலம் மாணவர்கள் மன அழுத்தமும் குறைக்கப் படுகிறது. இப்பயிற்சிக்காக கூடுதல் நேரமும் செலவழிக்க வேண்டிய அவசியம் இன்றி பள்ளி நேரத்திலேயே பயிற்சி அளிக்கப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.